**04.03.2026**

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 145/2025</u>

அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தண்டபாணி | | |
| த/பெ | முருகேசன் | | |
| கிராமம் | சின்னபாபுசமுத்திரம் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 74 /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 04.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் புகார்தாரர் துளசி என்பவரை தெரியாது. ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார். எனக்கு இந்த வழக்கை குறித்து எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். எங்கள் ஊர் கோயில் அருகில் காவல்துறையினர் என்னிடம் ஒரு எழுதாத வெள்ளை தாள்களில் இந்த 2 கையெழுத்துக்களை வாங்கினார்கள். என்னுடன் மற்றும் ஒரு ஏழுமலை என்பவர் கையெழுத்து போட்டார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை காவல்துறையினர் விசாரணை எதுவும் செய்யவில்லை.

மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியமாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் அளித்ததற்கு இணங்க, சாட்சி பிறழ் சாட்சியமாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

எனது போலீஸ் விசாரணையில் கடந்த 23/12/2023 ம் தேதி மதியம் சுமார் 1.15 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த முனுசாமி மகன் ஏழுமலை மற்றும் நானும் சின்னபாபு சமுத்திரம் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் இருந்த போது, அங்கு நின்று இருந்த எங்கள் ஊரைச் சேர்ந்த தாண்டவராயன் மகன் அறிவழகன் என்பவர் கண்டமங்கலம் காவல் ஆய்வாளர் கைது செய்த போது, அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் அவர் 22/12/2023 ம் தேதி தனக்கு குடிப்பதற்கு கையில் காசு இல்லாததால், இரவு சுமார் 7.00 மணியளவில் சின்ன பாபு சமுத்திரம் ஆர்ச் அருகே பெரிய பாபு சமுத்திரத்தில் இருந்து கண்ணமங்கலம் நோக்கி ஒரு சிறுவன் இருசக்கர வாகனத்தில் தனியாக வந்தார் என்றும், அவரை வழிமறித்து டே பாக்கெட்டில் எவ்வளவு பணம் வைத்திருக்கிற என எடுக்க சொல்லி மிரட்டியதாகவும், அந்தப் பையன் என்னிடம் பணம் எதுவும் இல்லை என்று சொன்னதாகவும், அவனை கன்னத்தில் ஒரு அரை விட்டு, தான் மறைத்து வைத்திருந்த சிறிய பேனா கத்தியை எடுத்து அந்த பையனை மிரட்டி, அவன் பாக்கெட்டில் கையை விட்டு ரூ.200/- பணம் எடுத்துக்கிட்டு இந்த விஷயத்தை யாரிடமாவது சொன்னால் உன்னை கத்தியால் குத்தி கொலை செய்து விடுவேன் என்று அந்த பையனை மிரட்டி விட்டு, அந்தப் பையனிடம் பறித்த காசை அரியூருக்கு ஒயின்ஷாப்பிற்கு சென்று குடித்துவிட்டு செலவழித்து விட்டதாகவும், அந்தப் பையனை மிரட்டுவதற்கு பயன்படுத்திய பேனா கத்தியை தன்னிடம் வைத்திருப்பதாகவும், அந்தப் பையனை வழிமறித்து பணத்தைப் பிடுங்கி இடத்தை தன்னை அழைத்து சென்றால் காண்பிப்பதாகவும், மேற்படி எங்கள் அருகில் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியிருந்தார் என்றும் அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றும், அந்த பேனா கத்தியை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை